(General Terms and Conditions)

பொதுவான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்

1. பாங்க் ஒப் சீனா லிமிடட் தனது கொழும்புக் கிளையில் (BOC) உள்ளடக்கப்பட்டதும் வரையறுக்கப்படாததுமான வகையில், வங்கியால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய வரையறுக்கப்பட்ட கடன், கடன் பொறுப்பைக் கொண்டுள்ள வியாபார நிறுவனங்கள், அல்லது வேறு ஏதேனும் நிறுவனங்கள்/ அமைப்புகள் (இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளில், சொல்லப்பட்ட நிறுவனங்கள் இனிமேல் சில வேளைகளில் "வாடிக்கையாளர்/ வாடிக்கையாளர்கள் என குறிப்பிடப்படும்.) ஆகியவற்றின் பெயரில் சேமிப்பு நடைமுறை மற்றும் தவணை வைப்பு கணக்குகள் (கணக்கு/கணக்குகள் என மொத்தத்தில் குறிப்பிடப்படும்.) உள்ளிட்ட வியாபாரக் கணக்கொன்றை ஆரம்பிக்கலாம் என்பதுடன் அது அத்தகைய வாடிக்கையாளர்களுக்கான வங்கிச் சேவைகளையும் வழங்கலாம். கணக்கை/கணக்குகளை ஆரம்பித்து அத்தகைய வங்கிச் சேவைகளை பயன்படுத்திக் கொள்வதன் மூலம் வாடிக்கையாளரானவர், இத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் குற்ப்பிட்ட சேவைகளுக்குப் பொருத்தக் கூடிய வேறு ஏதேனும் விசேட நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு ஒழுகுவதற்கு இணங்குகின்றார்.

2. ஒவ்வொரு கணக்கும் ஒரு குறிப்பிட்ட இலக்கத்தைக் கொண்டிருப்பதுடன் வங்கியுடனான அனைத்து கடிதத் தொடர்புகள் மற்றும் அனைத்து பண வைப்புத்துண்டுகள் மற்றும் பணத்தை மீளப் பெறும் துண்டுகள் ஆகியவற்றில் இக்கணக்கு இலக்கங்கள் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

3. வாடிக்கையாளர் நிறுவனமானது, பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளையின் பொது நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு ஒழுகும் பொருட்டு அதன் பணிப்பாளர்கள் சபை அல்லது அதன் ஆளும் அதிகார சபையின் தீர்மானமொன்றின் பிரகாரம் அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரர்களின் மாதிரிக் கையொப்பத்தை/கையொப்பங்களையும், அத்தகைய அதிகாரமானது பொதுவானதா அல்லது வரையறுக்கப்பட்டதா என்பதைனைத் தெரிவித்து, பிற்பட்ட காலத்தில் அத்தகைய வரையறையின் சரியான விஸ்தீரத்தினையும் வாடிக்கையாளர் நிறுவனம் பாங்க் ஒப் சீனா லிமிடட் கொழும்புக் கிளையிடம் வழுங்குவதற்கான கடப்பாட்டினைக் கொண்டுள்ளது. கையொப்பமிடுவருக்கு அதிகாரமளிக்கும் ஆவணங்களில் வரையறை எதுவும் கூறப்பட்டிருக்காவிடின், கையொப்பமிடும் அத்தகைய நபர்களின் அதிகாரமானது சபை உறுப்புரைகளில் அல்லது கூட்டுத்தாபனங்களின் ஒழுங்குவிதிகளில் அல்லது பொதுவான அல்லது வரையறுக்கப்பட்ட அற்றோனித் தத்துவங்களில் அல்லது ஏனைய ஆவணங்களில் குறிப்பாக விபரிக்கப்பபட்டுள்ளதாக தோன்றுவதாக இருந்தாலும் கூட, எந்தத் தொகைக்கும் அல்லது எந்தவொரு பொருளுக்குமென வழுங்கப்பட்டுள்ள எந்தவொரு மாதிரி கையொப்பத்திற்கும் வாடிக்கையாளர் நிறுவனமே முழுமையாக பொறுப்பாக விளங்கும். முன் குறிப்பிட்ட ஆவணங்களில் அது பற்றிய அறிவித்தல்

தரப்படின், வாடிக்கையாளரைக் கட்டுப்படுத்துவதற்கான தகைமை படைத்த நபர்கள் அல்லது அவர்தம் அதிகார எல்லை சம்பந்தமான மாற்றியமைப்பானது பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளைளயினால் மட்டுமே அங்கீகரிக்கப்படும். இந்த உறுப்புரையில் குறிப்பிட்டுள்ளவாறு மாதிரிக் கையொப்பபங்களை வழுங்கும் விடயத்தில் வாடிக்கையாளரின் உதாசீனத்தின் மூலம் அல்லது அவற்றை தவறான முறையில் அல்லது பூர்த்தி செய்யாத நிலையில் வழுங்குவதன் மூலம் ஏற்படும் சேதம் அல்லது இழப்புக்கு பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளை பொறுப்புடையதல்ல.

4. வாடிக்கையாளர் எந்த விதத்திலும் பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளைக்கான கட்டுப்பாடுகளைப் பூர்த்தி செய்யாத விடத்து, பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளையானது, அதன் நிறைவேற்றல் உரிமைக்கு மேலதிகமாக, அத்தகைய காலப்பகுதியில் சட்டத்தின் பிரகாரம் அது நேர்த்தியானனதைக் கருதும் அத்தகைய விதத்தில், எதுவித முன் அறிவித்தல் வழுங்காமல் அல்லது அழைப்பாணையொன்றை முன்னரே வழுங்காமல் முழு பிணையத்தையும் அல்லது அதன் பகுதியை வசூல் செய்வதற்கும், வட்டி மற்றும் செலவுகள் அடங்கலாக கடனை திருப்பிச் செலுத்தும் கணப்பொழுது வரை, பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளைக்கு வருமதியாகவுள்ள அனைத்துப் பணத் தொகைகளுக்குமான வருமானங்களை ஈடு செய்து கொள்ளவதற்கும் அதிகாரம் பெற்றுள்ளது.

5. சட்டத் தொழிற்பாட்டின் மூலம் அல்லது வேறொரு முறையில், பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளைக்கு உரித்தாகக் இருக்கக்கூடிய ஏதேனும் பொதுவான ஆஸ்தி அல்லது ஏனைய உரிமைகள் அல்லது பரிகாரங்களுக்கு மேலதிகமாக, பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளைக்கு வாடிக்கையாளரால் செலுத்த வேண்டிய பொறுப்புகளுடனான வாடிக்கையாளரின் அனைத்து அல்லது ஏதேனும் கணக்கை/ கணக்குகளை பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளைக்கு வாடிக்கையாளருக்கு எந்த நேரத்திலும் முன் அறிவித்தல் வழுங்காமல் ஒன்று படுத்தலாம் மற்றும் அல்லது ஒன்றுதிரட்டலாம் என்பதுடன், முன் சொல்லப்பட்ட ஏதேனும் அத்தகைய கணக்கு/கணக்குகளின் பேரில், வாடிக்கையாளரின் ஏதேனும் கட்டுப்பாடுகள் குறித்த திருப்தி குறித்த பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளையிடமிருந்து வாடிக்கையாளருக்கு செலுத்த வேண்டியவை அல்லது வேறு ஏதேனும் விடயம் சம்பந்தமாக மற்றும் அத்தகைய கட்டுப்பாடுகள் உண்மையானவையாக அல்லது எதேச்சையானவையாக, ஆரம்ப நிலையிலட உள்ளவையாக, அல்லது இரண்டாம் பட்சமானவையாக அல்லது தனித்தனியானவையாக அல்லது கூட்டானவையாக இருகக்கூடிய ஏதேனும் கணக்குகளின் பேரில் உள்ள பணத் தொகைகளை ஈடு செய்து கொள்ளலாம். அல்லது கைமாற்றிக் கொள்ளலாம்.

6. நிலையான வைப்புகள் காலமுதிர்வின் போது மட்டுமே மீளப் பெறுதல் செய்யலாம். ஏதேனும் நிலையான வைப்புகள் மூலம் கிடைக்கும் வருமானங்கள், நிதித் தொகைகளை மீள் முதலீடு செய்யுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்படாத பட்சத்தில்

காலமுதிர்வு திகதிக்கு அடுத்த நாள் மட்டுமே கிடைக்கப் பெறுவதற்கு ஆவண செய்யப்படும். எவ்வாறிருப்பினும் வாடிக்கையாளாரால்/வாடிக்கையாளர்களால் உரியவாறு அதிகாரமளிக்கப்பட்ட எழுத்துருவிலான வேண்டுகோள்களின் பேரில், காலமுதிர்வுக்கு முன்னரே நிலையான வைப்புகளை வங்கியானது தனது ஏகதற்றுனிவின் பேரில் வழங்கலாம். இவ்வாறு, வங்கியின் ஏகதற்றுனிபின் பேரில் காலமுதிர்வதற்கு முன்னர் வழங்கப்படும் நிலையான வைப்புகளுக்கு பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளையியின் சுங்க வரி விதிப்பு முறையில் குறிப்பிட்டுள்ள தண்டப் பணம் அறவிடப்படும்.

7. எதிரிடையான குறிப்பிட்ட அறிவுறித்தல்கள் இல்லாத நிலையில் நிலையான வைப்புகள் காலமுதிர்வின் போது, காலமுதிர்வு நாளன்று கணக்கிலுள்ள வட்டி வீதத்தில் அதனையொத்த காலப்பகுதியொன்றுக்கென புதுப்பித்துக் கொள்ளப்படும்.

8. கணக்கானது நடைமுறைக் கணக்கொன்றாக இருக்குமிடத்து கணக்கில் உள்ள வரவு நிலுவைகள் மீது வட்டியெதுவும் செலுத்தப்படமாட்டாது.

9. சேமிப்பு அல்லது நிலையான வைப்பு கணக்காக உள்ள ஏதேனும் கணக்கு மீது செலுத்தபடவேண்டிய வட்டி வீதமானது வங்கியால் இலங்கையில் உள்ள அதன் கிளையில் மற்றும் அல்லது வங்கியின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் காட்சிப்படுத்தப்படும்.

10. தற்போதுள்ள நிலையான வைப்புக்கள் கால முதிர்வடையும் வரையில் அவற்றின் மீதான ஒப்பந்தம் செய்யப்பட்ட வட்டி வீதத்தினை வங்கியானது மாற்றிக்கொள்ளாது என்பதை தவிர பொதுவான பண வைப்புக்களுக்கான வட்டிவீதமானது மாற்றத்திற்குட்பட்டதாகும்.

11. வரவுப் பதிவுகளைச் செல்லுபடியாக்கும் வகையில் பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக்கிளை வாடிக்கையாளரிடமிருந்து அல்லது வாடிக்கையார் சார்பில் நிர்ணய மதிப்பை பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பின் அது நேர்த்தியான முறையில் உரிய நேரத்தில் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். அவ்வாறு செய்யத் தவறின் பாங்க ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளையானது, வரவுப் பதிவை மேற்கொண்டால் கூட அதனை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ மீள்பெறுவதற்கு உரித்துடையதாகும்.

12. பின்வரும் ஒழுங்கு விதிகள் பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளையுடனான வாடிக்கையாளரின் கணக்கு மீது வாடிக்கையாளரால் காசோலை மூலம் பணம் பெபறுதலை ஆட்சிப்படுத்தும். :-

(அ) வாடிக்கையாளர் தனக்கு பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளையால் கையளிக்கப்படும், காசோலைப் புத்தகத்தைப் பாதுகாப்பான முறையில் வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன், குறித்த காசோலைப் புத்தகமோ அல்லது ஏதேனும் காசோலைகளோ தொலைந்தமை அல்லது திருட்டுப் போனமை குறித்து

வாடிக்கையாளர் உடனடியாகவே பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளைக்கு அறியத் தர வேண்டிய கட்டுப்பாடுடையவராவார். இதன் போது வாடிக்கையாளர், காசோலை இலக்கம், திகதி, தொகை மற்றும் பணம் கொடுபடவேண்டியவரின் பெயர் குறித்த விபரங்களை வழங்கி கொடுப்பனவை நிறுத்துமாறு உடனடியாக அறிவுறுத்த வேண்டும். அத்தகைய அறிவுறுத்தலானது கிடைக்கப்பெறும் போது சம்பந்தப்பபட்ட காசோலைக்கு/காசோலைகளுக்கு பணம் செலுத்தப்பட்டிருக்காமல் இருந்தால் மட்டுமே, அத்தகைய அனைத்து அறிவுறுத்தல்களும் ஏற்றுக்கொள்ளப்படும். கொடுப்பனவை நிறுத்தக் கோரும் அறிவுறுத்தலானது பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளையானது அதன் பிரகாரம் செயற்படும் வகையில் நியாயமான கால எல்லைக்குள் எழுத்துருவில் உறுதிப் படுத்தப்படல் வேண்டும். மேற்படி உறுதிப்படுத்தல் இதற்கு முன்னர் கிடைக்கப்பெறாத நிலையிலும், செயற்படுவதற்குப் போதிய கால அவகாசம் வழங்கப்படாத நிலையிலும், களவாடப்பட்ட, சட்டவிரோதமாகப் பாவிக்கப்பட்ட,மோசடியான முறையில் மாற்றப்பட்ட அல்லது பொயய்க் கையெழுத்திடப்பட்ட காசோலை யொன்றிற்கான பணத்தை பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளை செலுதிதிருப்பின், அவ்வாறு செலுத்தப்பட்ட தொகையை வாடிக்கையாளரின் கணக்கில் பற்று வைப்பதற்கு பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளை உரித்துடையதாக விளங்கும்.

(ஆ) வாடிக்கையாளர் வழங்கும் ஏதேனும் காசோலையை வாடிக்கையாளரே நிரப்புதல் வேண்டும். இத்தகைய விதத்தில் பொய்யான விபரங்களை வழங்குதல் கூடியளவு தடுக்கப்படல் வேண்டும். எனவே, வழங்கப்படும் காசோலையில் கொடுபட வேண்டிய தொகையானது இலக்கங்கள் மற்றும் சொற்களில் எழுதப்படல் வேண்டும். அத்தகைய வழிமுறையில் ஏதேனும் இலக்கங்களை அல்லது சொற்களை சேர்த்தல் இயலாத காரியமாக்கப்படல் வேண்டும்.

(இ) வாடிக்கையாளருக்கான காசோலைப் புத்தகம் மேலும் பாவனைக்குத் தேவைப்படாத பட்சத்திலும், குறித்த கணக்கு மூடப்படும் பட்சத்திலும், வாடிக்கையாளர் குறித்த காசோலைப் புத்தகத்தை பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளைக்கு கூடிய விரைவில் திருப்பி ஒப்படைப்பதற்கு கடமைப்பட்டவராவார்.

(ஈ) வாடிக்கையாளர் கணக்குகளில் வரவு வைக்கப்படும் காசோலைகள் சேகரிப்புக்கு மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், பணம் பெறுகை, பணம் வழங்கும் பெறுபவர் வங்கியினால் முற்றாக தெளிவாக்கப்படும் வரை அவற்றுக்கான பணம் மீளப் பெறுவதக்கென வழங்கப்படமாட்டாது.

(உ) வாடிக்கையாளர்/வாடிக்கையாளர்களால் தமது கணக்குகளில் உள்ள பணத்தொகைக்கு மேலதிகமாக எடுத்தலாகாது, அல்லது பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளையுடன் ஒப்புக் கொண்ட ஏதேனும் மேலதிகப் பற்று எல்லைக்கு அப்பால் காசோலைகளை வழங்களாகாது. அதன் பிரகாரம் குறித்த கணக்குகளில் போதியளவு பணம் இல்லாதிருப்பின் குறித்த காசோலைகளை ஏற்றுக்

கொள்ள மறுப்பதற்கும் திருப்பி அணுப்பப்படும் ஒவ்வொரு காசோலைக்கும் தண்டப்பணம் அறவிடவுமான உரிமயை பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளை தன்னகத்தே கொண்டுள்ளது. கணக்கில் உள்ள பணத்திற்கு மேலதிகமாக சமர்ப்பிக்கப்படும் காசோலையை/காசோலைகளை பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளையானது தனக்கே உரித்தான தற்றுணிபின் பேரில் ஏற்றுக்கொள்ளலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில், நிபந்தனையற்ற வகையில் கோரப்படும் வட்டி மற்றும் கட்டணங்களுடன் கூடிய மேலதிகமாகப் பெற்றுள்ளத் தொகையை திருப்பிச் செலுத்துவதற்கான பொறுப்பு வாடிக்கையளரையே சாரும் என்பதுடன் வாடிக்கையாளரிடமிருந்து வட்டி மற்றும் வங்கி கட்டணங்களை மீள அறவிடுவதற்கான உரிமையை பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளை தன்னகத்தே கொண்டுள்ளது. பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளையானது மேலதிகப் பற்று ஒன்றை வழங்குவதற்கு கடமைப்பட்டுள்ளதென்ற ஒப்பந்தமொன்றாக இது அர்த்தம் செய்யப்படலாகாது.

13. வெளிநாட்டு நாணயக் கணக்கை வைத்திருப்போர் அதை பற்றிய அறிவை கொண்டிருப்பதுடன், வெளிநாட்டு நாணயக் கணக்குகள் சம்பந்தமாக, உரிய சட்டங்கள், ஒழுங்குவிதிகள், பணிப்புரைகள் மற்றும் ஏனைய அறிவித்தல்கள் குறித்து பரிச்சயமுள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டுமென அறிவுறுத்தப்படுவதுடன், அவர்கள் சட்டபடியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைபாடுகளை மீறும் ஆபத்தை நீக்கும் வகையில், அவற்றிக்கு எல்லா நேரங்களிலும் இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

14. எந்த நேரத்திலும் பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக்கிளை மீது விதிக்கப்படும் பெறுமதி சேர் வரி, தேசத்தை கட்டியெழுப்பும் வரி, மற்றும் அல்லது ஏனைய வரிகள், கட்டணங்கள் அல்லது வரிகள் போன்றவற்றை ஈடுசெயய்வதற்கென பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக்கிளையால் கோரப்படக்கூடிய அத்தகைய ஏனைய பணத்தொகைகள் உள்ளிட்ட அனைத்து வட்டி, கட்டணங்கள், தரகு கூலி அல்லது ஏனைய வங்கிக் கட்டணங்கள், மற்றும் செலவுகளுடன் பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளையானது வாடிக்கையாளர் கணக்கில் பற்று இடலாம். அத்துடன், பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்பு கிளைக்கு ஏற்படும் அனைத்து செலவுகளும், உதாரணமாக, தபாற் செலவு, முத்திரை கட்டணங்கள் மற்றும் தொலை பரிவர்த்தனை (செறிவு) (கேபில்) வாடிக்கையாளரிடமிருந்தே அறவிடப்படும்.

15. வாடிக்கையாளரின் கணக்கிலான/கணக்குகளிலான அனைத்து கொடுக்கல் வாங்கல்கள் குறித்த பதிவேடுகள், வாடிக்கையாளர் பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளைக்கு அறிவுறுத்தப்பட்டவாறு, காலப் பகுதி அடிப்படையில் குறிப்பிட்ட மின்னஞ்சலுக்கு வங்கியால் அனுப்பப்படும் நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

16. பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளையுடன் பேணப்பட்டு வரும் நடைமுறை, சேமிப்பு அல்லது வேறெந்தக் கணக்குகள் குறித்த தொழிற்பாடு சம்பந்தமாக மட்டுமே நிதிக் கூற்று அனுப்பி வைக்கப்படும்.

17. கணக்கு/கணக்குகள் குறித்த நிதிக் கூற்றுகள் கவனமான முறையில் பரீட்சிக்கப்படல் வேண்டுமென்பதுடன், ஏதேனும் தவறு அல்லது விடுபடல் கானப்படுமாயின் அது பற்றி பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளைக்கு உடனடியாக அறிவிக்கப்படவும் வேண்டும். நிதிக் கூற்றுக்கள் கிடைக்கப் பெற்று பதினான்கு நாட்களுக்குள் கூற்றுக்களிலான தவறுகள் அறிவிக்கப்படாவிடின் நிதிக்கூற்றுக்கள் பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளைக்கும் வாடிக்கையாளருக்குமிடையே இறுதியானதும் தீர்க்கமானதாகவும் கருதப்படும்.

18. பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளையில் ஆரம்பிக்கபப்படும் கணக்கு/கணக்குகள் குறித்த தொழிற்பாடு சம்பந்தமாக, வியாபார கம்பனியொன்றாக, கூட்டிணைக்கப்பட்ட அமைப்பு அல்லது கூட்டுத்தாபனமொன்றாக விளங்கும் ஏதேனும் வாடிக்கையாளர் நிறுவனத்தின் பணிப்பாளர்கள் அல்லது முதன்மை அலுவலர்கள் மத்தியில் நிலவும் தகராறு குறித்த பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளைக்கு ஏதேனும் காரணம் கருதி அறிவிக்கப்டுமாயின், பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளைக்கு திருப்தியளிக்கும் வகையில் அத்தகைய தகராறு தீர்த்துக்கொள்ளப்படும் வரை குறித்த கணக்கு/கணக்குகள் குறித்த தொழிற்பாட்டினை மட்டுப்படுத்தவோ அல்லது முழுமையாக நிறுத்திக்கொள்ளவோ வங்கிக்கு உரிமை உண்டு.

19. பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளையானது நம்பிக்கையாளர் சபைகளை அங்கீகரிப்பதில்லை. எவ்வாறிருப்பினும் விதிவிலக்கான விடயங்களைப் பொறுத்த வரையில், பயனாளிகளை அடையாளம் காட்டக்கூடிய நம்பிக்கையாளர் சபைகள் தொடர்பில், பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளை தனது வரம்பற்ற தற்றுணிபின் பேரில் கணக்குகளை ஆரம்பிக்கலாம்.

20. பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளையானது வாடிக்கையாளருக்குள்ள செல்வ மூலம் மற்றும் நிதி மூலம் சம்பந்தமான சொல்லப்பட்ட தகவல்களைச் செவ்வை பார்த்தல் உள்ளிட்ட தகவல்களை தனக்கே உரித்தான தற்றுணிபின் பேரில் கோரலாம்.

21. ஆணைபப் பத்திரத்தில்/பணிப்பாளர் சபைத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ள தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் பிரகாரம் அவை கைச்சாத்திடப்பபட்டுள்ளன எனும் நிபந்தனையின் பேரில் கம்பனி சார்பில் வழங்கப்படும் ஏதேனும் முன் காப்பீடுகளை மட்டுமே பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளை ஏற்றுக்கொள்ளும்.

22. பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளையானது ஏதேனும் கணக்கை எந்த நேரத்திலும் தனக்கே உரித்தான மற்றும் சுயேட்சையான தற்றுணிபின் பேரில்

காரணமெதனையும் கூறாமல் முடிவுக்கு கொண்டு வரலாம். எவ்வாறிருப்பினும், பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளையானது கணக்கு மூடப்படுவது குறித்த 30 நாள் முன்னறிவித்தலை வாடிக்கையாளருக்கு வழங்கும். சொல்லப்பட்ட அறிவித்தலானது கடைசியாக அறியப்பட்ட வாடிக்கையாளரின் முகவரிக்கு தபால் மூலம் வாடிக்கையாளருக்கு அனுப்பப்படின் அது வாடிக்கையாளரிடம் போதுமான கால எல்லைக்குள் சேர்ப்பிக்கப்படும் வகையில் அனுப்பப்படும். வாடிக்கையாளர் தம்வசமுள்ள பாவிக்கப்படாத அனைத்துக் காசோலைகளையும் கோரிக்கையின் பேரில் திருப்பி ஒப்படைத்தல் வேண்டும்.

23. பூஜ்ஜிய நிலுவைக் கொண்ட கணக்கு/கணக்குகளை அல்லது ஆறு (06) மாதகாலத்திற்கு மந்தப் போக்கடைந்து வரும் கணக்குகளை ஒரு மாத கால எழுத்துருவிலான அறிவித்தலை வழங்கி மூடிவிடுவதற்கான உரிமையை பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளையானது தன்னகத்தே கொண்டுள்ளது.

24. பாங்க் ஒப் சீனா லிமிடட்டின் கொழும்புக் கிளையானது தனது வளாகத்தினுள் வெளிப்படையான பணக் கருமபீடங்களை வழங்காமல் இருக்கலாம் என்பதுடன் பணம் வைப்பிடல் மற்றும் மீளப் பெறுதல் நடவடிக்கைகள் அவ்வப்போது அடையாளங் காணப்படக்கூடிய வங்கியின் (BOCC) சேவை வழங்குநர்களுடன் (Service Providers) மேற்கொள்ளும் தேவை ஏற்படலாம். அத்துடன்,

25. வாடிக்கையாளரால் பெயர் குறிக்கப்பட்ட ஏதேனும் இடங்களில் சேவை வழங்குநர்கள் பண சேகரிப்பு மற்றும் வழங்கல் நடவடிக்கைகளை வசதிபடுத்துமிடத்து, பின்வருவன பொருந்தக்கூடியதாக அமைதல் வேண்டும்.

    i. வாடிக்கையாளரானவர் பணத்தை சேகரிக்கவும் வழங்கவுமென அதிகாரமளிக்கப்பட்ட நபர்களை பெயர் குறிப்பிடல் வேண்டுமென்பதுடன் ஆணையின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்ட அவர்களின் கையொப்பங்களை வழங்கவும் வேண்டும்.

    ii. பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக்கிளையானது, பண சேகரிப்பு மற்றும் வழங்களுக்கெனவும் அவர்களின் கையொப்பங்களை வழங்கவுமென அதிகாரமளிக்கப்பட்ட சேவை வழங்குநர்களின் பெயர் குறிப்பிட்ட நபர்கள் பற்றிய பட்டியலை பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளை வாடிக்கையாளருக்கு வழங்குதல் வேண்டும்.

    iii. பணம் சேகரித்தல் மற்றும் வழங்குதல் என்பன பெயர் குறிப்பிடப்பட்ட வளாகத்திலேயே இடம்பெறும்.

    iv. ஆரம்பிக்கப்பட்டுள்ள கணக்கு வகையின் பிரகாரம், சேகரிப்பு மற்றும் வழங்கல் அந்த நாணயமாகவே இருக்கும் என்பதுடன் பணத்தை எண்ணும் நடவடிக்கை வாடிக்கையாளரால் பெயர் குறிப்பிடப்படும் வளாகத்திலேயே மேற்கொள்ளப்படும்.

v. வாடிக்கையாளர் நிறுவனத்திடமிருந்து பணம் சேகரிக்கப்படும் விடயத்தில், அது வங்கிப் பண வைப்பு துன்டொன்றில் நிரப்பி அதனை சேவை வழங்குநரிடம் கையளித்தல் வேண்டும்.

vi. வாடிக்கையாளர் நிறுவனத்திற்கு பணம் வழங்கப்படும் விடயத்தில் அது வங்கி மீளப்பெறல் துன்டொன்றில் நுட்பமாக ஆராயப்பட்ட பிரதியினை வங்கியிலுள்ள பெயர் குறிப்பிட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டுமென்பதுடன் அதன் மூலப்பிரதியை (Hard Copy) சேவை வழங்குநரிடம் கையளித்தல் வேண்டும்.

vii. வாடிக்கையாளர் நிறுவனத்திற்கு பணம் வழங்கல் தேவைப்படும் விடயத்தில், அது தொகைகள் பண வகை, பொதி செய்யும் ஒழுங்குகள் முதலானவற்றையும் எதிர்பார்க்கப்படும் வழங்கல் நேரத்திற்கு ஆகக்குறைந்த 24 மணி நேரத்திற்கு முன்னர், ஏற்றுக்கொள்வதற்கென அதிகாரமளிக்கப்பட்ட முன் அங்கீகாரம் பெற்ற நபர்கள் உள்ளிட்ட விபரங்களையும் வங்கிக்கு அனுப்புதல் வேண்டும்.

viii. பணத்தை மீளப்பெறுவதற்கான செல்லுபடியான நுண்பிரதி மற்றும் மின்னஞ்சல் செய்யப்பட்ட தொலைநகல் மூலம் அனுப்பப்பட்ட மீளப்பெறல் அறிவுறுத்தல் கிடைக்கப்பெற்றதன் பேரில், பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக்கிளையானது வாடிக்கையாளரின் கணக்கை உடனடியாக பற்றுப்பதிவு செய்தல் வேண்டும். வாடிக்கையாளர் கணக்குப்பதிவுகள் வங்கி வேலை நேரங்களில் மட்டுமே செய்யப்படும்.

ix. பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளைக்கு வாடிக்கையாளர் நிறுவனத்தால் பெயர் குறிக்கப்பட்ட வளாகத்திலிருந்து பணத்தைச் சேகரிக்க வேண்டிய தேவை ஏற்படும் இடத்தில், பணத்தை பெற்றுக்கொள்ளும் நேரங்கள், பணத்தை கையளிப்பதற்கென அதிகாரம் பெற்றுள்ள முன் அங்கீகாரம் பெற்ற நபர்கள் உள்ளிட்ட விபரங்களை வங்கிக்கு தெரியப்படுத்தல் வேண்டும். முன் ஏற்பாடின்றி பணம் வைப்பு செய்ய வேண்டிய தேவை ஏற்படின், மேற்குறிப்பிட்ட விபரங்கள் 24 மணி நேரத்திற்கு முன் வங்கிக்கு தெரியப்படுத்தல் வேண்டும்.

x. பணம் பெற்றுக் கொள்ளலுக்கென, அத்தகைய பெற்றுக்கொள்ளல் குறித்து சேவை வழங்கு நபரிடமிருந்து பெறப்படும் உறுதிப்படுத்தலின் பேரில் பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளையானது வாடிக்கையாளர் கணக்கை வரவில் இடல் வேண்டும். வாடிக்கையாளர் கணக்குப் பதிவுகள் வங்கி வேலை நேரங்களின் போது மாத்திரமே மேற்கொள்ளப்படும்.

xi. பணம் வழங்கல்கள் மற்றும் பெற்றுக்கொள்ளல் தொடர்பில், வாடிக்கையாளரின் பெயர் குறிப்பிட்ட வளாகச் சுற்றளவுக்குள் ஏற்படும் பண இழப்பு வாடிக்கையாளரின் பொறுப்பிலேயே இருத்தல் வேண்டும். இது பணம் பெற்றுக்கொள்ளல் மற்றும் வழங்கல்கள் விடயத்தில் சேவை வழங்குநரால்

பெற்றுக்கொள்ளப்பட்ட வைப்பு சிட்டை அல்லது மீளப் பணம் பெறும் சிட்டையின் மறு பாகத்தை வாடிக்கையாளர் வைத்துள்ள போதும், நடைமுறையிலிருக்கும்.

xii. வாடிக்கையாளர் பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளையினை, கருப்புப்பணத்தினை செலவாணியாக்குதல் மீது விதிக்கப்படும் கட்டண விளைவுகள், ஏதேனும் வரிகள் ஏய்ப்பு, அல்லது சட்டபூர்வ கொடுக்குமதிகள், ஏதேனும் ஒழுங்குப்படுத்தல் அல்லது சட்டபூர்வ அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படக்கூடிய ஏதேனும் சட்டபூர்வமற்ற அல்லது சட்டத்திற்கு முரணான செயற்பாடு உள்ளடங்களாக பணத்தை பெற்றுக்கொள்ளல் மற்றும் வழங்கல் தொடர்பில் பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளையின் நியதிகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்க, பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளையின் செயற்பாட்டின் விளைவால் ஏற்படக்கூடிய அனைத்து செலவுகள், கட்டணங்கள், மற்றும் செலவுகள் (சட்ட செலவுகள் மற்றும் கட்டணங்களில் வரம்பு இல்லாத நிலை உட்பட) ஆகியவற்றிலிருந்து இத்தால் மாற்ற முடியாத வகையிலும் நிபந்தனையற்ற முறையிலும் விடுவித்துக்கொள்கின்றார்.

xiii. சேவை வழங்குநர்கள் மூலம் பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளையினால் பண சேகரிப்பு மற்றும் வழங்கல் சேவைகள் வழங்கப்படும் பொருட்டு, பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளையானது அத்தகைய சேவை வழங்குனர்களிற்கு தொடர்பான கையொப்பமிடுவோர் பட்டியல் உள்ளிட்ட குறிப்பிட்ட தகவல்களை சேவை வழங்குநர்களுக்கு வழங்க வாடிக்கையாளர் ஒத்துக்கொள்கின்றார்.

26. பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளையானது மூன்றாம் தரப்பினர்க்கு தனது கட்டுபாடுகளின் செயலாற்றுகையை, உப ஒப்பந்தப்படுத்தலாம் அல்லது அதிகார மாற்றத்தை ஒப்படைக்கலாம். எவ்வாறாயினும், பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளையே அத்தகைய கடமைகளின் செயலாற்றுகைக்கு தொடர்ந்தும் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

27. பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளை தேவையெனக் கருதும் பட்சத்தில் அதனிடம் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களின் குறிப்பிட்ட பிரதிகளை சான்றுப்படுத்தி உறுதிப்படுத்தும்படி கேட்கலாம்.

28. வாடிக்கையாளர் பற்றிய சுயவிபரங்களில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படின் உடனடியாக வாடிக்கையாளரால் பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளைக்கு அறிவிக்கப்படல் வேண்டும். பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளைக்கு தன்னால் கணக்கு ஆரம்பிக்கும் படிவத்தில் குறிப்பிடப்பட்ட அனைத்து தகவல்களும் தனது அறிவுக்கு எட்டிய வரை உண்மையானவை என்பதனையும் சரியானவை என்பதனைனயும் வாடிக்கையாளர் உத்தரவாதப்படுத்துகின்றார். இத்தகைய தகவல்களில் ஏற்படும் ஏதேனும் மாற்றங்கள் குறித்து பாங்க் ஒப் சீனா

லிமிடெட்டின் கொழும்புக் கிளைக்கு அறிவிப்பதற்கான பொறுப்பை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார்.

29. ஏதேனும் மேலதிகப்பற்று அல்லது வேறு ஏதேனும் வங்கி கடன் வசதிகள் நடைமுறையில் உள்ளபோது, மேற்படி கணக்கில்/கணக்குகளில் வரவில் இடப்படும் ஏதேனும் அல்லது அனைத்து தொகைகளும், அத்தகைய வட்டி முழுமையாக செலுத்தப்படும் வரை சொல்லப்பட்ட மேலதிகப் பற்று அல்லது வேறு ஏதேனும் வங்கி கடன் வசதிகள் மீது செலுத்தப்பட வேண்டிய வட்டியை குறைப்பதற்கே முதலில் பிரயோகிக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் வரவில் இடப்படும் ஏதேனும் தொகைகள் அத்தகைய மேலதிக பற்றின் அல்லது வேறு ஏதேனும் வங்கி கடன் வசதிகள் தொகையின் மூலதன தொகையைக் குறைப்பதற்குப் பிரயோகிக்கப்படும்.

30. பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளையில் பேணப்பட்டு வரும் அனைத்துக் கணக்குகளும் பின்வருனவற்றால் அதிகாரம் செலுத்தப்படல் வேண்டுமென்பதனை வாடிக்கையாளர் இத்தால் ஏற்றுக்கொண்டு ஒப்புக்கொள்கின்றார் :

i. பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளையினால் விதித்துரைக்கப்பட்ட வழிமுறைகள் மற்றும் நியதிகள் மற்றும் நிபந்தனைகள்

ii. இலங்கை மத்திய வங்கியினால் அல்லது வேறு ஏதேனும் அதிகார சபையினால் பிறப்பிக்கப்படும் விதிமுறைகள் மற்றும் ஒழுங்கு விதிகள் மற்றும் தற்போது இலங்கையில் பின்பற்றப்பட்டுவரும் சட்ட விதிகள்.

31. பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளையுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கெள்வதற்கென வாடிக்கையாளரால் பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளையின் இணையத்தள வங்கிப் பயன்பாடு மேற்கொள்ளப்படும் விடயத்தில் அவற்றுக்கிடையேயான விசாரணைகள், ஆலோசனைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் போன்ற தொடர்பாடல் மூலத்தை செவ்வை பார்க்கவென வடிவமைக்கப்பட்ட குறிப்பிட்ட ஒப்புக்கொள்ளப்பட்ட பாதுகாப்பு செயற்கருமங்களுக்கு வாடிக்கையாளர் கட்டுப்பட்டு செயற்படுதல் வேண்டும். பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளையானது, தொடர்பாடல்களை அனுப்புவதற்கென வாடிக்கையாளரால் பெயர் குறிக்கப்பட்ட ஒவ்வொரு நபரினதும் அதிகாரத்தில் தங்கிருப்பதற்கு உரித்துடையதாயிருத்தல் வேண்டுமென்பதுடன், தொடர்பாடலொன்றை அனுப்பும் நபரொருவரின் அடையாளத்தை அல்லது அதிகாரத்தை தாபிப்பதற்கென செயல்முறைகளில் உள்ளடக்கப்பட்டவற்றை தவிர்ந்த வேறு எதனையும் செய்வதற்கான கட்டுப்பாட்டை பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளை கொண்டிருக்காது.

32. வாடிக்கையாளருடன் ஒப்புக்கொள்ளப்பட்ட சுங்க வரிக்கேற்ப பற்று இடல்படவேண்டிய ஏதேனும் சேவைகள் சம்பந்தமாக ஏற்படும் வழக்கமான அனைத்து வங்கிச் சேவை மற்றும் ஏனைய கட்டணங்கள் மற்றும் செலவுகளை

வசூல் செய்வதற்கு அல்லது விதிப்பதற்கெ பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளை உரித்துடையதாயிருத்தல் வேண்டுமென்பதுடன், இவை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்காவிடின் அவை பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளையின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் வெளியிடப்பட்டிருத்தல் வேண்டும். பொருத்தமான கட்டணங்கள் மற்றும் வங்கி கட்டணங்களை எந்த நேரத்திலும் முன்னறிவித்தல் இன்றி வசூலிப்பதற்கான உரிமையை பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளை தன்னகத்தே கொண்டுள்ளது.

33. பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளையும் மற்றும் பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் குழும உறுப்பினர்களும் (வாடிக்கையாளர் பற்றிய உரிய தகவல்கள்,வாடிக்கையாளரின் கொடுக்கல் வாங்கல்கள், வாடிக்கையாளர் பாவித்து வரும் பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளையின் வங்கி தயாரிப்புக்கள் மற்றும் சேவைகள் மற்றும் குழுமத்துடனான வாடிக்கையாளரின் சம்பந்தம் உள்ளடங்கலாக)வாடிக்கையாளர் தகவல்களைச் சேகரிக்கவும் பாவிக்கவும், பகிர்ந்து கொள்ளவும் முடியும். வாடிக்கையாளர் தகவலானது வாடிக்கையாளரிடமிருந்து (அல்லது வாடிக்கையாளர் சார்பில் செயற்படும் நபரிடமிருந்து) கோரப்படலாம் மற்றும் பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளையினால் அல்லது அதன் சார்பில், அல்லது குழும உறுப்பினர்களால் (பகிரங்கமாக கிடைக்கப்பெறும் தகவல்கள் ஏனைய மூலகங்கள், பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளைக்கு அல்லது குழுமத்தின் உறுப்பினர் எவருக்கும் கிடைக்கக்கூடிய ஏதேனும் தகவல்களுடன் இணைந்த வகையிலும் சேகரிக்கப்படலாம். (இத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் குறித்த நோக்கம் கருதிய பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்பு குழுமம் என்பது பாங்க் ஒப் சீனா யையும் அதன் துணை நிறுவனங்கள் அல்லது கிளைகள் எவற்றையும இத்தால் அர்த்தப்படுத்தும்)

34. பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளையும் மற்றும் அதன் குழும உறுப்பினர்களும் பின்வரும் நோக்கங்கள், தொடர்பிலான வாடிக்கையாளர் தகவலை செயல்முறைப்படுத்தும், மாற்றும் மற்றும் வெளிப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுவர்:-

(அ)வாடிக்கையாளரால் கோரப்படும் அல்லது அதிகாரமளிக்கப்படும் ஏதேனும் கொடுக்கல் வாங்கல்களுக்கான சேவைகளை வழங்குதல்.

(ஆ)இணங்கி ஒழுகும் கட்டுப்பாடுகளை நிறைவேற்றல்

(இ)நிதிசார் குற்ற அபாய நிலை முகாமைத்துவ செயற்பாட்டை மேற்கொள்ளல்

(ஈ)வாடிக்கையாளரிடமிருந்தான ஏதேனும் வருமதியான தொகைகளை சேகரித்தல்

(உ)கடன் செவ்வை பார்த்தல்களை நடாத்துதல் மற்றும் கடன் குறிப்புக்களைப் பெற்றுக்கொள்ளல் அல்லது வழங்குதல்

(ஊ) பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளையின் அல்லது குழும உறுப்பினரொருவரின் உரிமைகளைக் நடைமுறைப்படுத்தல் அல்லது பாதுகாத்தல்

(எ) பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளை அல்லது குழுமத்தின் உள்ளக தொழிற்பாட்டுத் தேவைப்பாடுகள் (வரையறை அற்ற, கடன் மற்றும் ஆபத்து கால முகாமைத்துவம், முறைமை அல்லது உற்பத்தி அபிவிருத்தி மற்றும் திட்டமிடல், காப்புறுதி, கணக்காய்வு மற்றும் நிருவாக நோக்கங்கள் உள்ளடங்கலாக)

(ஏ) வாடிக்கையாளருடனான பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் ஒட்டுமொத்த உறவுமுறையை பேணுதல் (சந்தைப்படுத்தல் அல்லது வாடிக்கையாளருக்கான நிதிசார் சேவைகளை அல்லது தொடர்புடைய உற்பத்திப் பொருட்களையும் சந்தை ஆய்வினையும் ஊக்கப்படுத்தல் உள்ளடங்கலாக)

35. மேற்படி சேவைகளை பாவிப்பதன் மூலம், பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளையானது வாடிக்கையாளர் தகவல் எதனையும் முன் சொல்லப்பட்ட நோக்கத்தை கருதி வாடிக்கையாளருக்கு (அத்தகைய வாடிக்கையாளரும் அத்தகைய தகவலை நோக்கங்கள் கருதி செயற்படுத்த, மாற்ற, வெளிப்படுத்த கூடியவர்) அறிவிக்காமல் பின்வரும் நபர்களுக்கு மாற்றவும் வெளிப்படுத்தவும் முடியும்:-

(அ) குழும உறுப்பினர் எவரேனும்

(ஆ) குழுமத்தின் உப ஒப்பந்தாரர்கள், முகவர்கள்,சேவை வழங்குநாகள் அல்லது கூட்டாளிகள் (அவர்களின் பணியாளர்கள், பணிப்பாளர்கள் மற்றும் அலுவலர்கள்)

(இ) வாடிக்கையாளர் சார்பில் செயற்படும் எவரேனும், கொடுப்பனவை பெற்றுக்கொள்வோர், பயணாளிகள், கணக்கு நியமனதாரிகள், பொது நபர், கடிதம் மூலம் தொடர்பு கொள்வோர், முகவர் வங்கிகள், பொருட்களை அப்புறப்படுத்தும் முகவர்கள், தீர்வு முறைமைகள் சந்தைப்படுத்தல் ஒத்த தரப்பினர், நிறுத்தும் முகவர்கள், பண்டமாற்று அல்லது வர்த்தகக் களஞ்சியங்கள், பங்கு பரிவர்த்தனை நிலையங்கள், பிணையங்களில் வாடிக்கையாளர் ஆர்வங்காட்டக் கூடிய கம்பனிகள் (வாடிக்கையாளர்களுக்கென பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளையினால் பிணையங்கள் வைத்திருக்கப்படும் கம்பனிகள்)

(ஈ) சேவைகள் தொடர்பான ஈடுபாட்டை மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட ஆபத்துக்களை எதிர் கொண்டுள்ள எந்தத் தரப்பும்

(உ) ஏனைய நிதிசார் நிறுவனங்கள்,கடன் வழங்கும் முகவரமைப்புக்கள் அல்லது கடன் தகவல் பணியகங்கள், சட்டபூர்வ அதிகாரசபைகள் நீதிமன்றம், கணக்காய்வாளர்கள்/வரி ஆலோசகர்கள்.

(ஊ) வாடிக்கையாளருக்கான சொத்து முகாமைத்துவ சேவைகளை வழங்கிவரும் மூன்றாம் தரப்பு நிதி வழங்கும் முகாமையாளர்கள்

(எ) பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளையிடமிருந்து அறிமுகங்களை அல்லது குறிப்புக்களை அறிமுகப்படுத்தும் எவரேனும் தரகர்.

(ஏ) பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளையின் வியாபார இடமாற்றம், பராதீமை செய்தல், இணைத்தல் அல்லது ஈட்டல் ஆகியவற்றுடன் தொடர்புடைய ஏதேனும் விடயம்

(ஐ) தரவுப் பாதுகாப்புச் சட்டங்களை தம்மகத்தே கொண்டிராத நியாயாதிக்கம் காணப்படும் சேவைகள் வழங்கப்படும் இடங்கள்.

36. பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளைக்கு ஏற்படக்கூடிய ஏதேனும் பணக் கோரல்கள், கோரிக்கைகள், சேதங்கள், பொறுப்புக்கள், ஆகு செலவுகள், இழப்புக்கள், ஏனைய செலவுகள் மற்றும் ஏனைய பணத்தொகைகள் ஆகியவற்றிலிருந்து வாடிக்கையாளர் பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளையினை விடுவித்தல் வேண்டும். இவ் விடுவிப்பானது எவ்வாறிருப்பினும், வாடிக்கையாளருக்கான சேவை குறித்த ஏற்பாடு தொடர்பில், வாடிக்கையாளரின் ஏதேனும் கட்டுப்பாடுகள் அல்லது அதன் சார்பில் செயற்படவென சேவை குறித்த பிரதிநிதியாக கருதப்படும் நபர்களின் அதிகாரம் குறித்து அறிந்திராத நிலையில், அது வேணடுமென்றே செய்திராத தன் விளைவால் ஏற்படும் ஏதேனும் இழப்பு உள்ளிட்ட பணத்தொகையினை வாடிக்கையாளர் பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளையின் கோரிக்கையின் பேரில் அதற்கு திருப்பி வழங்கும் விதத்தில் அமையும்.

37. பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளையானது, இனக்கலவரம், உள்நாட்டு யுத்தம், இயற்கை அனர்த்தங்கள் மற்றும் வங்கியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட ஏதேனும் சூழ்நிலைகள் அல்லது பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளை பொறுப்பேற்க முடியாத ஏனைய நிகழ்வுகளால் (உதாரணம்:- வேலை நிறுத்தங்கள், கதவடைப்பு, வழிப்பறிக்கொள்ளை, குடிசார் கிளர்ச்சி உள்நாட்டு அல்லது வெளிநாட்டு அரசாங்க அல்லது ஏனைய அதிகார சபைகளின் செயற்பாடுகள், ஏதேனும் சட்ட அல்லது ஒழுங்கு விதி தேவைப்பாடுகள், சந்தைப்படுத்தல் இடையூறு அல்லது அப்புறப்படுத்தல்/தீர்வு முகவரமைப்பு அல்லது மத்திய வைப்பகம் ஆகியவற்றின் ஏதேனும் செயற்பாடு)ஆகியவற்றால் ஏற்படும் ஏதேனும் இழப்புக்களுக்கோ அல்லது பலவந்தமான நிகழ்வு காரணமாக செயற்பட்ட இயலாமைக்கோ பாங்க் ஒப் சீனா லிமிடெட்டின் கொழும்புக் கிளை பொறுப்பேற்காது.

38. வங்கிச் செயற்பாடு தொடர்பான விண்ணப்பங்கள், நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் ஏனைய வங்கி சார்ந்த ஆவணங்களில் வேறு மொழிகளில் கூறப்பட்ட விடயங்களில் ஏதேனும் முரண்பாடு காணப்படும்

பட்சத்தில், ஆங்கில மொழியே முதன்மை நிலையில் இருத்தல் வேண்டும். இம்மொழியில் கூறப்பட்டவையே கவனத்தில் எடுக்கப்பட்டு முதன்மை பெறும்.

கையொப்பம்

பெயர்:-.....

பதவிப்பெயர்:-.....

கையொப்பம்

பெயர்:-.....

பதவிப்பெயர்:-.....